# உண்மை மதத்தை நீங்கள் எப்படி கண்டறியலாம்?

**எல்லா மதங்களும் கடவுளுக்குப் பிரியமானவையா, அல்லது ஒன்று மட்டுமா? (1) கிறிஸ்தவமாக உரிமைபாராட்டக்கூடிய அத்தனை அநேக மதங்கள் ஏன் இருக்கின்றன? (2) உண்மை கிறிஸ்தவர்களை நீங்கள் எவ்வாறு அடையாளம் கண்டுகொள்ள முடியும்? (3-7)**



1. இயேசு உண்மை கிறிஸ்தவ மதம் ஒன்றைத் தொடங்கினார். ஆகவே இன்றும் யெகோவாவின் உண்மை வணக்கத்தாராலான ஒரு குழு, அல்லது ஒரு தொகுதி மட்டுமே இருக்க வேண்டும். (யோவான் 4:23, 24; எபேசியர் 4:4, 5) சிலர் மட்டுமே ஜீவனுக்கான இடுக்கமான பாதையில் செல்கிறார்கள் என்பதாக பைபிள் போதிக்கிறது.—மத்தேயு 7:13, 14.

2. அப்போஸ்தலரின் மரணத்துக்குப் பின்னர், தவறான போதகங்களும் கிறிஸ்தவமற்ற பழக்கங்களும் மெதுவாகக் கிறிஸ்தவ சபைக்குள் நுழைந்துவிடும் என்பதாக பைபிள் முன்னறிவித்தது. கிறிஸ்துவைப் பின்பற்றுவதற்குப் பதிலாக சில மனிதர் தங்களைப் பின்பற்றும்படி விசுவாசிகளை இழுத்துக்கொள்வார்கள். (மத்தேயு 7:15, 21-23; அப்போஸ்தலர் 20:29, 30) ஆகவேதான், கிறிஸ்தவமாக உரிமைபாராட்டுகிற அத்தனை அநேக வித்தியாசமான மதங்களை நாம் பார்க்கிறோம். உண்மை கிறிஸ்தவர்களை நாம் எப்படி அடையாளம் கண்டுகொள்ளலாம்?

3. உண்மை கிறிஸ்தவர்களுடைய மிகவும் மேம்பட்டு நிற்கும் அடையாளம் என்னவென்றால், அவர்கள் தங்களுக்கிடையே உண்மையான அன்பு உள்ளவர்களாய் இருக்கிறார்கள். (யோவான் 13:34, 35) மற்ற இனங்களை சேர்ந்தவர்கள் அல்லது வேறு தோல் நிறத்தை உடைய மக்களைவிட தாங்கள் மேம்பட்டவர்கள் என்று நினைப்பதற்கு அவர்கள் போதிக்கப்படவில்லை. மற்ற நாடுகளிலுள்ள மக்களை வெறுப்பதற்கு அவர்கள் போதிக்கப்படவுமில்லை. (அப்போஸ்தலர் 10:34, 35) ஆகவே அவர்கள் போர்களில் பங்கெடுப்பதில்லை. உண்மை கிறிஸ்தவர்கள் ஒருவரையொருவர் சகோதர சகோதரிகளாகக் கருதி நடத்துகின்றனர்.—1 யோவான் 4:20, 21.

4. உண்மை மதத்தைத் தனிப்படுத்திக் காண்பிக்கும் வேறொரு பண்பு என்னவென்றால், அதன் அங்கத்தினர்கள் பைபிளுக்கு ஆழ்ந்த மரியாதையை கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அதை கடவுளுடைய வார்த்தையாக ஏற்றுக்கொண்டு அது சொல்லுவதை நம்புகிறார்கள். (யோவான் 17:17; 2 தீமோத்தேயு 3:16, 17) மனித கருத்துக்கள் அல்லது பழக்கவழக்கங்களைவிட கடவுளுடைய வார்த்தையை அதிக முக்கியமானதாக அவர்கள்

கருதுகிறார்கள். (மத்தேயு 15:1-3, 7-9) அவர்கள் தங்களுடைய தினசரி வாழ்க்கையில் பைபிள் சொல்லுகிறபடி வாழ முயலுகிறார்கள். ஆகையால் அவர்கள் ஒரு காரியத்தைப் போதித்துவிட்டு, பின்னர் வேறுவிதமாய் நடப்பதில்லை.—தீத்து 1:15, 16.

5. உண்மையான மதம் கடவுளுடைய பெயரை கனம்பண்ணவும் வேண்டும். (மத்தேயு 6:9) கடவுளுடைய பெயராகிய யெகோவா என்பதை இயேசு, மற்றவர்கள் அறியப்பண்ணினார். உண்மை கிறிஸ்தவர்களும் அதையே செய்ய வேண்டும். (யோவான் 17:6, 26; ரோமர் 10:13, 14) *உங்களுடைய சமுதாயத்தில், மற்றவர்களுக்குக் கடவுளுடைய பெயரைப் பற்றி சொல்லுகிற மக்கள் யார்?*

6. உண்மை கிறிஸ்தவர்கள் கடவுளுடைய ராஜ்யத்தைப் பற்றி பிரசங்கிக்க வேண்டும். இயேசு அவ்வாறு செய்தார். அவர் எப்போதும் ராஜ்யத்தைப் பற்றி பேசினார். (லூக்கா 8:1) இதே செய்தியைப் பூமி முழுவதிலும் பிரசங்கிக்கும்படி அவர் தம்முடைய சீஷர்களுக்குக் கட்டளையிட்டார். (மத்தேயு 24:14; 28:19, 20) கடவுளுடைய ராஜ்யம் மட்டுமே உண்மையான சமாதானத்தையும் பாதுகாப்பையும் இந்தப் பூமிக்குக் கொண்டுவரும் என்று உண்மை கிறிஸ்தவர்கள் நம்புகிறார்கள்.—சங்கீதம் 146:3-5.

7. இயேசுவின் சீஷர்கள் இந்தப் பொல்லாத உலகின் பாகமாக இருக்கக் கூடாது. (யோவான் 17:16) இந்த உலகின் அரசியல் விவகாரங்களிலும் சமூக சர்ச்சைகளிலும் அவர்கள் ஈடுபடுவதில்லை. உலகில் சாதாரணமாக இருக்கும் கேடு விளைவிக்கும் நடத்தை, பழக்க வழக்கங்கள், மற்றும் மனப்பான்மைகளை அவர்கள் தவிர்க்கிறார்கள். (யாக்கோபு 1:27; 4:4) *உங்கள் சமுதாயத்தில், உண்மை கிறிஸ்தவத்தின் இந்த அடையாளங்களை உடைய ஒரு மதத் தொகுதியை உங்களால் அடையாளம் கண்டுகொள்ள முடியுமா?*





***உண்மை கிறிஸ்தவர்கள் ஒருவரையொருவர் நேசிக்கிறார்கள், பைபிளை மதிக்கிறார்கள், கடவுளுடைய ராஜ்யத்தைப் பற்றி பிரசங்கிக்கிறார்கள்***